மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : அரசு அப்படி நியமித்தாலும் அதுவும் நியமனமாகத்தான் ஆகும். நியமனம் வேண்டுமா, வேண்டாமா என்பதைத்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அப்படிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிற போது அதே தவறை அரசாங்கம் நிச்சயமாகச் செய்யாது.

திரு. கே. உச்சி : கூட்டுறவு நிறுவனங்களில் தேர்தல் கொண்டு வரப்படும்போது, கட்சி சார்பற்ற முறையிலே கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : புதிதாக இந்த அரசுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலோசனை சொன்னதற்காக மிக்க நன்றி.

திரு. நா. சுந்தரராஜ் : கூட்டுறவுத் துறையிலே ஊழல் சம்பந்தமாக தனி நபர் விசாரணைக் கமிஷன் வைக்கப்பட்டதா ? அது சம்பந்தமான ரிப்போர்ட் கிடைத்திருக்கிறதா ? அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : தனி கமிஷனுடைய அறிக்கை எல்லா மாவட்ட மத்திய கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிய அறிக்கையைக் கொடுத்தது. அது எல்லாவற்றைப்பற்றியும் நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்--விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. ஒழுங்குப் பிரச்சினை.

அரிசன நல மானியக் கோரிக்கைக்கு அதிக நேரம் ஒதுக்குவது குறித்து.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இன்று அரிசன நல மானியக் கோரிக்கை. பொதுவாகவே வழக்கமாக புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற உணர்வு

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1977 ஆகஸ்ட் 6] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

அவர்களிடத்திலே இருக்கிறது, இந்தக் கோரிக்கை வருகிறபோது கூட அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற கருத்து வரக்கூடும். ஆகவே கேள்வி நேரத்தை அதிகமாக எடுத்துக் கொண்டு அரிசன நல மானியக் கோரிக்கைக்கு கொடுக்கப்பட்ட நேரத்தைக் குறைத்துக் கொள்வது சரியல்ல. ஆகவே கேள்விகளை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் என்னோடு ஒத்துழைத்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தைத்தான் நானும் சொன்னேன். கேள்விகள் இன்னும் நான்கு இருக்கின்றன.

திரு. சி. ஆறுமுகம் : அரிசன நலத்துறை மானியம், பிற்பட்டோர் நலத்துறை மானியம் இரண்டும் வருகின்றன, ஆகவே மாலை நேரத்தில் சட்டசபையைக் கூட்டி விவாதித்தால் இரண்டு தரப்பு மக்களுக்கும் எதுவாக இருக்கும், ஆகவே அப்படிச் செய்வார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவிலே இவை எல்லாம் விவாதிக்கப்பட்டு மாலையில் வைத்தால் அவ்வளவு சிறப்பாக இருக்காது என்று தெரிவிக்கப்பட்டு காலையிலேயே எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நான்கு கேள்விகளையும் சுருக்கமாக முடித்துக் கொண்டால் உடனே எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இது பொறுப்பாளும் என் கையில் இல்லை. அவை ஒன்றாகக் கூடி முடிவு எடுக்குமானால் இந்தக் கேள்விகளை நாளைக்கு ஒத்திப்போடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் இருக்கிறது, கவன ஈர்ப்புத் தீர்மானம் இருக்கிறது, அதையும் சேர்த்து நாளைக்கு எடுத்துக் கொள்ளலாமா ?

திரு. ப. உ. சண்முகம் : எல்லாவற்றையும் ஒத்திவைக்கலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் தெரிந்து கொள்ள விரும்புவது கேள்விகளை மட்டும் ஒத்திவைப்பதா ? அல்லது மற்றைய ஒத்திவைப்புத் தீர்மானங்களையும் ஒத்திவைப்பதா ?

(குறுக்கிடு) மன்னிக்க வேண்டும். தயவுசெய்து கொஞ்சம் தெளிவாக இந்தப் பிரச்சினைக்கு வரவேண்டுமென்று நான் விரும்புகின்ற காரணத்தால் தெரிவிக்க விரும்புகிறேன். மானியக் கோரிக்கையின் முக்கியத்துவத்தைக் கருதி, ஒத்திவைப்புத் தீர்மானங்களையும், எழுப்பியுள்ள கேள்விகளையும் இன்றைக்கு ஒத்திவைத்து, இவற்றை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம், திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளலாம் என்ற என்னுடைய கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவை ஏற்றுக் கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, 'லிஸ்ட் ஆஃப் பிசினெஸிலே' என்ன இருக்கிறதோ அதை ஒத்திவைக்க முடியுமே தவிர ஒத்திவைப்புத் தீர்மானம் லிஸ்ட் ஆஃப் பிசினெஸிலே வராது. எல்லா நிலைமைகளையும் ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதற்காகத்தானே ஒத்திவைப்புத் தீர்மானத்தையே நாங்கள் கொண்டு வருகிறோம். அதையும் எப்படி ஒத்திவைப்பது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசி முடித்து நீங்களெல்லாம்தான் சொன்னீர்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்களும் சொன்னார்கள்.

திரு. துரை முருகன்: பேராசிரியருக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் வருகிறது என்று எப்படித் தெரியும்?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, திரு. சுப்பு அவர்கள் கிளப்பிய பிரச்சினையின் நியாயத்தை நான் உணர்கிறேன். ஆனால் எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் ஒத்திவைக்கலாம், அதைத் திங்கட்கிழமை வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னதன்பேரில் நான் அந்தக் கருத்தைச் சொன்னேனே தவிர, திரு. சுப்பு அவர்களுக்கு ஒரு கருத்தும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்களுக்கு இன்னொரு கருத்தும் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

*** திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அவையினுடைய நடவடிக்கையில் மிக முக்கியமான கோரிக்கைக்காக கேள்வி நேரத்தை மேலும் எடுத்துக்கொள்ளாமல் ஒத்திவைக்கலாம் என்ற

பொதுக்கருத்தை நான் ஏற்றுக்கொண்டேன். ஒத்திவைப்புத் தீர்மானம் என்பது அவைத் தலைவர் மட்டுமே அறிந்திருக்கக்கூடிய ஒன்று. அதைத் தந்தவர்களுக்கும் பேரவைத் தலைவரவர்களுக்கும் மட்டுமே தெரியக்கூடிய ஒன்று. அந்தத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தைப் பார்த்து அவையும் ஒத்திவைப்பதாக இருந்தால் அவைத் தலைவர் ஒத்திவைக்கலாமே தவிர அது என்போன்ற துணைத் தலைவருக்கும், கட்சி உறுப்பினருக்கும் தெரியாத ஒன்று. எனவே துணைத் தலைவருக்கும் உறுப்பினருக்கும் இடையே கருத்து வேறுபாடு என்ற கருத்தை முன்னவரவர்கள் இங்கே தெரிவித்தது, முதலில் ப. உ. ச. அவர்கள் சொன்ன கருத்தை நான் சொன்னதாக எடுத்துக் கொண்டதால் ஏற்பட்டது. ப. உ. ச. அவர்கள் எல்லாவற்றையும் ஒத்திவைக்கலாம் என்று சொன்ன கருத்தை துணைத் தலைவர் சொன்னதாக அவை முன்னவர் எடுத்துக்கொண்டார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மன்னிக்க வேண்டும். இவ்வளவு குழப்பத்திற்கும் காரணம் ப. உ. ச. அவர்களும், சுப்பு அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்களும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையைப்பற்றி, ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஒத்திவைப்பது என்பதைப்பற்றித் தயவுசெய்து நீங்கள் முடிவெடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றித் தாங்களே முடிவெடுக்கலாம். கேள்வி நேரத்தைப்பற்றியும், கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப்பற்றியும்தான் நான் சொன்னேன். குழப்பத்தை நான் செய்ததாகக் கூறுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்நேரம் நான் கேள்விகளையே முடித்திருப்பேன். (சிரிப்பு) ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும், நான்கு கேள்விகளையும் நான் திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கிறேன். இப்பொழுது 1977-1978 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரவர்கள் இப்பொழுது தீர்மானத்தை முன்மொழிவார்கள்.